மாகாணக்கல்வித் திணைக்களம்- வட மாகாணம்

வணிகக்கல்வி (Business Studies)

உயர்தர வர்த்தக பாட மாணவர்களுக்கான விடுமுறைகால சுயகற்றலுக்கான பயிற்சி வினாக்கள் -2020

தரம் 12

காப்புறுதி(Insurance)

1. காப்புறுதி என்றால் என்ன?

   ……..

   ……..





2. காப்புறுதி செய்யக்கூடிய இடர்கள் கொண்டிருக்க வேண்டிய பண்புகள் நான்கு தருக.

   ……..

   ……

   ……

3. காப்புறுதி செய்ய முடியாத இடர்கள் நான்கினைக் குறிப்பிடுக.

   ……

   ……

4. வணிக நிறுவனமொன்றின் நீடித்த வாழ்தன்மைக்கு காப்புறுதியானது எவ்வாறு துணைபுரிகின்றது?

   ……

   ……

   ……

   ……



www.ikeduk

5. காப்புறுதி ஒன்றுடன் தொடர்புடைய தரப்பினர்கள் யாவர்?

……

……

6. காப்புறுதித் தத்துவங்களைக் குறிப்பிடுக.

……

……

……

7. சிறுகுறிப்பு எழுதுக.

அ) மறுகாப்புறுதி

……

……

ஆ) ஒப்புறுதி

……

……

இ) இரட்டைக் காப்புறுதி

……

……

8. பொதுக் காப்புறுதியின் வகைகளைக் குறிப்பிடுக.

……

……

……

……

9. பொறுப்புக் காப்புறுதியின் வகைகளைக் குறிப்பிடுக.

……

……

10. தவகரன் என்பவர் தனது மனைவியின் மீது ஒரு முழுமையான ஆயுளுறுதிப் பத்திரமொன்றை பெற்றுக்கொண்டார். பின்னர் ஒரு கட்டத்தில் மனைவி தவகரனிடமிருந்து விவாகரத்தைப் பெற்றுக்கொண்டார். சில காலத்தின் பின் அவள் இறந்து விட்டாள். காப்புறுதி செய்யப்பட்ட தொகையை தவகரனிற்கு கொடுப்பதற்கு அக்காப்புறுதிக் கம்பனி பொறுப்புடையதா? உமது விடைக்கான காரணங்களைத் தருக.

……

……

……

11. ஆயுள் காப்புறுதி ஏனைய காப்புறுதி வகைகளிலிருந்து வேறுபடும் முறையினைக் குறிப்பிடுக.

……

……

……

12. மோட்டார்வாகனக் காப்புறுதியின் கீழ் பெற்றுக்கொள்ளக் கூடிய காப்புறுதி வகைகள் இரண்டு தருக.

……

……

13. அருச்சுனன் என்பவர் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் ரூ 1000000 பெறுமதியான தனது மோட்டார் வாகனத்தை அதே பெறுமதிக்கு காப்புறுதி செய்திருந்தார். இவரது மோட்டார் விபத்துக்குள்ளாகியதன் காரணமாக ரூ 300000 இழப்பு ஏற்பட்டுள்ளதுடன் பாதையில் நடந்து சென்ற காந்தன் என்பவருக்கும் சிறிய காயங்கள் ஏற்பட்டிருந்தன.
மேலே தரப்பட்ட சம்பவத்தின்படி காப்புறுதி தொடர்பில்,

i. முதலாம் தரப்பினரைப் பெயரிடுக. ……

ii. இரண்டாம் தரப்பினரைப் பெயரிடுக. ……

iii. மூன்றாம் தரப்பினரைப் பெயரிடுக. ……

iv. அருச்சுனன் பெற்றுக்கொள்ளக்கூடிய இழப்பீட்டின் பெறுமதியைக் குறிப்பிடுக.

……

www.keou.lk

14. காப்புறுதித் தொழிலின் அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்வதற்காக இலங்கை காப்புறுதி சபை ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இச் சபையினால் நிறைவேற்றப்படும் நான்கு பணிகளைக் குறிப்பிடுக.

……
……
……
……

15. வணிகக் கருமங்களை மேற்கொள்கின்றபோது வணிகர்கள் பொறுப்புக் காப்புறுதியொன்றைப் பெற்றுக்கொள்வது முக்கியமானது. பொறுப்புக் காப்புறுதி என்பதனை அறிமுகப்படுத்தி, அதன்கீழ் பெற்றுக்கொள்ளக்கூடிய காப்புறுதி ஒப்பந்தங்கள் இரண்டைச் சுருக்கமாக விவரிக்குக.

……
……
……
……

16. காப்புறுதியுடன் தொடர்புடைய பின்வரும் எண்ணக்கருக்கள் காப்புறுதி செய்பவருக்கு எவ்வாறு முக்கியத்துவமானதாய் அமையும் என்பதை விளக்குக.
    (1) இழப்பீட்டுத் தத்துவம்:-

    ……
    ……

    (2) மறுகாப்புறுதி

    ……
    ……

17. நிஹால், டேவிட் ஆகியோரினால் சிற்றளவில் ஆரம்பிக்கப்பட்ட தைக்கப்பட்ட ஆடை உற்பத்தி வணிகமானது இன்று பாரிய ஆடைத் தொழிற்சாலையொன்றாக மாறி உள்ளது. இதன்போது அவர்கள் முகம் கொடுக்கும் இடர்கள் நான்கினையும் அவற்றிற்குப் பெற்றுக்கொள்ளக் கூடிய காப்புறுதிகள் நான்கினையும் குறிப்பிடுக.

……
……
……
……

18. கரன் என்பவரால் ரூபா. 500 000 பெறுமதியான திடீர் விபத்துக் காப்புறுதி ஒப்பந்தம் ஒன்று பெற்றுக் கொள்ளப்பட்டது, ஒரு வருடத்தின் பின்னர் அவர் தீடீரென ஏற்பட்ட இருதய நோயின் காரணமாக இறந்து விட்டார். அவரது உரித்தாளரினால் காப்புறுதி இழப்பீட்டுத் தொகையினைத் தருமாறு கோரிக்கை விடப்பட்டாலும் காப்புறுதிக் கம்பனியினால் அக்கோரிக்கையை நிராகரிக்கப்பட்டு விட்டது. காப்புறுதி கம்பனியால் அவ்வாறு கொடுப்பனவை இரத்துச் செய்ய முடியுமா? முடியாதா? என்பதனை விளக்கவும்.

……
……
……
……

19. காப்புறுதி செய்யப்பட்ட சொத்தொன்றிற்கு இழப்பீடு செலுத்தும்போது கருத்திற்கொள்ளப்படும் நியதிகள் இரண்டைக் குறிப்பிடுக.

……
……

20. தீ அபாயக் காப்புறுதியின் அடிப்படையில் தீ அபாயங்களுக்கு மேதிகமாக மேலதிக தவணைக்கட்டணம் செலுத்துவதன் மூலம் உள்வாங்கக் கூடிய இடர்களைக் குறிப்பிடுக.

……
……
……
……
……

www.ikedu.lk